THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Friday, 8th December 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I. QUESTIONS AND ANSWERS

STARRED QUESTIONS.

Milk (Madras City)

* 2164 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சென்னை நகருக்கு சராசரி ஒரு நாளைக்குப் பால் எவ்வளவு தேவைப்படுகிறது ?

(இ) எத்தனை ஆண்டுகளில் அத்தேவையைப் பூர்த்தி செய்ய முடியும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) Eight and a half lakhs lbs. of milk per day on the basis of the minimum standard requirement of 8 ozs. per head per day.

(இ) It is not possible to state at this stage in how many years the requirement can be met, as this question is linked up not only with the question of increase in the production of milk by the various agencies but also with the increase in population, purchasing power of the people and other factors.

SRI S. M. ANNAMALAI : மூன்றுவது ஐந்தாண்டு திட்டத் திலே இதற்காக ஏதாவது பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி ஒதுக்கப்பட்டிருந்தால் எவ்வளவு பணம் ஒதுக்கப்பட் டிருக்கிறது ? இதைப் பூர்த்தி செய்வதற்கு சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது மில்க் காலனி இருக்கிறது. இதைத் தவிர டெய்ரி ப்ராஜக்ட் திட்டம் இருக்கிறது. மற்ற திட்டங்களுக்கு மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை சொல்வதற் கில்லை. சர்க்கார் சமர்ப்பிக்கப்போகும் வரவு-செலவு திட்டத்தில் எவ்வளவு பணம் ஒதுக்குவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியவரும்.

[8th December 1961

SRI K. VINAYAKAM: Would the Government be pleased to give instructions to the milk colony authorities to open more milk kiosks in the various parts of the City where the demand could be easily met?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, that is being done as the production of milk and the availability of milk increases.

Milk Schemes

* 2165 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri M. KALYANASUNDARAM): Will the Hon. the Minister for Home be pleased to state the details of new milk schemes to be started in the cities of Tiruchirappalli, Salem, Coimbatore and Madurai respectively, under the Third Five-Year Plan?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The answer[a] is placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN: சார், இப்பொழுது பால் பண்ணைத் திட்டம் நமது ராஜ்யத்திலே திருச்சி, சேலம், கோயம்பத்தூர், மதுரை முதலிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. நமது ராஜ்யத்தில் மிகவும் ஜனத்தொகை அதிகமாக உள்ளதும், நமது ராஜ்யத்திலேயே ஆறாவது ஸ்தானத்தை வகிக்கக்கூடிய வட ஆர்க்காடு ஜில்லாவைச் சேர்ந்த வேலூரை ஏன் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. அங்கு இருப்பவர்கள் எல்லாம் ஏழைகள், பால்குடிக்க மாட்டார்கள் என்பது அரசாங்கத்தின் எண்ணமா?

DEPUTY SPEAKER: The hon. Member should restrict his supplementary question to the districts of Tiruchirappalli, Salem, Coimbatore and Madurai only. For North Arcot, he should put a separate question.

SRI V. K. KOTHANDARAMAN: திருச்சி, சேலம், கோயம்பத்தூர், மதுரை முதலிய இடங்களில் மாத்திரம்தானா, மற்ற எந்தெந்த இடங்களில் ஆரம்பிக்கப் போகிறார்கள் என்பதைத் தான் கேட்டேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்ட மூலக் கேள்வியிலே திருச்சி, சேலம், கோயம்பத்தூர், மதுரைப் பற்றியது. எந்தெந்த இடங்களில் பால் திட்டங்கள் இருக்கின்றன என்று உப கேள்வியில் கேட்டார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் மாத்திரம் அல்ல, மற்ற எல்லா மாவட்டங்களிலும் கூட்டுறவு முறையிலே பால் உற்பத்திக்கான

---

[a] Printed as Appendix I on pages 248–249 *infra*.